# மகளிர் தினத்தையொட்டி மெட்ரோவில் இசை விழா

**சென்னை, மார்ச் 4–**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மெட்ரோ ரயில் நிலையங்களில், இரண்டு நாட்கள் இசை விழா நடக்கிறது.

சென்னை, மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ் கலாசாரம், பாரம்பரியத்தை கொண்டாடும் விதமாகவும், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, பெண்களுக்கு பெருமை சேர்க்கும் விதமாகவும், மெட்ரோ நிலையங்களில், 7 மற்றும் 8ல், இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

வரும், 7ல், வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையத்தில், மாலை, 5:00 மணியில் இருந்து, இரவு, 7:00 மணி வரையும், வண்ணாரப்பேட்டையில் இருந்து, விமான நிலையம் வரை மெட்ரோ ரயிலிலும், 'ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை' இசை குழுவினரின் இசை நிகழ்ச்சி நடக்கிறது.



நங்கநல்லூர் சாலை மெட்ரோ நிலையத்தில், மாலை, 5:30 மணியில் இருந்து, 7:30 மணி வரை, கமலா இசை பள்ளியினரின், இசை நிகழ்ச்சி நடக்கிறது.

வரும், 8ம் தேதி, வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையத்தில், மாலை, 5:30 மணியில் இருந்து, இரவு, 7:30 மணி வரை, நிமிர்வு கலையகம் சார்பில், பறையாட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.